பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

10 09 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நேபாளத்தில் நிலவி வரும் சூழ்நிலை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் விவாதித்தார்.
2. சிறையில் தண்டனைக் காலத்தை நிறைவு செய்த 48 பாகிஸ்தான் மீனவர்கள் மற்றும் 19 பாகிஸ்தானியர்களை இந்தியா அந்நாட்டிற்கு திருப்பி அனுப்பியுள்ளது.
3. தமிழகத்திற்கு காவரி நீர் நீதிமன்ற தீர்ப்பின்படி திறந்துவிடப்படுவதாக கர்நாடக துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவகுமார் தெரிவித்துள்ளார்.
4. இந்தியா-அமெரிக்கா இடையேயான வர்த்தக தடைகளை நீக்குவது தொடர்பாக இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சுகளில் ஈடுபடும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.
5. உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Meenakshi காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நேபாளத்தில் நிலவி வரும் சூழ்நிலை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் விவாதித்தார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், நேபாளத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவம் மனதை வருத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

அந்நாட்டில் இளைஞர்கள் பலர் உயிரிழந்துள்ளது கவலையளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிலைத்தன்மை, அமைதி, செழுமை ஆகியவை நேபாளத்தின் தற்போதைய முக்கிய தேவை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேபாள மக்கள் அமைதி காக்குமாறும் திரு. மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<<<<>>>>

கத்தார் தலைநகர் தோஹாவில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அப்பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க அமைதியையும், ராஜதந்திரத்தையும் கடைபிடிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துவதாக கூறப்பட்டுள்ளது.

ஹமாஸ் தீவிரவாதிகளைக் குறிவைத்து கத்தார் தலைநகர் தோஹா மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளதையடுத்து, வெளியுறவு அமைச்சகம் இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே சண்டைநிறுத்தம் மற்றும் பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பான பேச்சுகளில் ஈடுபட்டுள்ளவர்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும் இத்தாக்குதலில் அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்றும், ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த 5 பேர் கொல்லப்பட்டதாகவும் கூறியுள்ளது.

தோஹா மீதான இஸ்ரேல் தாக்குதலுக்கு கத்தார் வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கட், ஜார்கண்ட், மத்தியப்பிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களில் உள்ள 76 ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகளின் உட்கட்மைப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக பழங்குடியினர் நல அமைச்சகமும், இந்திய நிலக்கரி நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெபுத்திட்டுள்ளன.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஒப்பந்தம், பழங்குடியினர் நல அமைச்சர் திரு. ஜுவெல் ஓரம், நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. ஜுவெல் ஓரம், இந்திய நிலக்கரி நிறுவனத்தின் இந்த முன்முயற்சியை வரவேற்பதாகவும், பழங்குடியினரின் கல்வி மற்றும்

மேம்பாட்டிற்காக மேலும் பல நிறுவனங்கள் முன்வரும் என்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

<<<<>>>>

சிறையில் தண்டனைக் காலத்தை நிறைவு செய்த 48 பாகிஸ்தான் மீனவர்கள் மற்றும் 19 பாகிஸ்தானியர்களை இந்தியா அந்நாட்டிற்கு திருப்பி அனுப்பியுள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அட்டாரி-வாகா எல்லைப் பகுதியில் அவர்கள் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சிறையில் உள்ள இந்திய மீனவர்கள் மற்றும் குடிமக்களின் விவகாரங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்துள்ளது.

அவர்களை விரைவில் விடுவிக்குமாறு பாகிஸ்தான் அரசை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

இந்தியா-அமெரிக்கா இடையேயான வர்த்தக தடைகளை நீக்குவது தொடர்பாக இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சுகளில் ஈடுபடும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதுதொடர்பாக விரைவில் தமது நண்பரும், பிரதமருமான திரு. மோடியை சந்தித்துப் பேசுவதை எதிர்நோக்கி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இரண்டு பெரிய நாடுகளுக்கிடையேயான பேச்சுகளில் வெற்றிகரமான தீர்வு ஏற்படுவதில் எந்த சிரமமும் இருக்காது என்று திரு. ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியா-மடகாஸ்கர் இடையே குடிமைப் பணி பயிற்சி மற்றும் நிர்வாக சீர்திருத்தம் குறித்து இருதரப்பு பேச்சுகள் நேற்று நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இப்பேச்சுகளில் மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், மடகாஸ்கர் அமைச்சர் திருமதி Hanitra Fitiavana ஆகியோர் பங்கேற்றனர்.

இந்திய நிர்வாக நடைமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் குறித்து மடகாஸ்கர் குடிமைப் பணியாளருக்கு பயிற்சி அளிப்பது தொடர்பாக இப்பேச்சுகளின்போது விவாதிக்கப்பட்டது.

அப்போது பேசிய டாக்டர் ஜிதேந்திர சிங் 85 சதவீதத்திற்கும் மேலான அரசு சேவைகள் மின்னணுமயமாக்கப்பட்டுள்தாகவும், இதன் மூலம் தாமதங்கள் தவிர்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்திற்கு காவரி நீர் நீதிமன்ற தீர்ப்பின்படி திறந்துவிடப்படுவதாக கர்நாடக துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள பழனி முருகன் கோவிலில் நேற்று சுவாமி தரிசனம் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

பழனி-கர்நாடகா இடையே மீண்டும் பேருந்து சேவையை தொடங்குவது குறித்து தமது மாநில போக்குவரத்து அமைச்சரிடம் எடுத்துரைக்க உள்ளதாக திரு. டி.கே. சிவகுமார் தெரிவித்தார்.

<<<<>>>>

மணிப்பூர் மாநிலத்தில் வரும் சனிக்கிழமையன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பயணம் மேற்கொள்வதை அடுத்து அதற்கான தயார் நிலைகள் குறித்து அம்மாநில ஆளுநர் திரு. அஜய்குமார் பல்லா, Churachandpur மாவட்டத்தில் ஆய்வு செய்தார்.

இது தொடர்பாக மணிப்பூர் மாநில தலைமைச் செயலாளர், மாநில பாதுகாப்பு ஆலோசகர், காவல்துறை தலைவர் உள்ளிட்டவர்களுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

மத்திய அரசின் ஊட்டச்சத்து இயக்கம் மூலம் நாடு முழுவதும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் இப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Vijayakumar - 53 Sec)

இந்த ஊட்டச்சத்து இயக்கத்தின் மூலம் அளிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் தங்களுக்கு பெரும் பயனளிப்பதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

(Voice Byte - Beneficiaries - 27 Sec)

<<<<>>>>

மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் மாநிலங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், அசாம், மேகாலயா, சத்தீஸ்கட், மிசோரம், திரிபுரா, நாகாலாந்து, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த 2 நாட்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Meenakshi காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 48 கிலோ எடைப் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர், 5-0 என்ற புள்ளிக் கணக்கில் சீனாவின் Wang Qiuping-ஐ வென்றார்.

-------------

ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்சை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

அபுதாபியில் நேற்று தொடங்கிய முதல் ஆட்டத்தில் ஆஃப்கனிஸ்தான் 94 ரன் வித்தியாசத்தில் ஹாங்காங்கை வென்றது.

முதலில் பேட் செய்த ஆஃப்கனிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 188 ரன் எடுத்தது.

189 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹாங்காங், 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 94 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

---------------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ் கருணாகரன் - ஆதியா வரியத் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-------------

ஆசியக் கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 2.15க்கு தொடங்குகிறது.

-----------

23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா 6-0 என்ற கோல் கணக்கில் புருனே அணியை வென்றது.

-----------

ப்ரோ கபடி லீக் போட்டியில் தில்லி அணி - பெங்கால் அணியையும், ஜெய்ப்பூர் அணி - குஜராத் அணியையும் வென்றன.

<<<<>>>>